www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| 12 - STD | அரையாண்டுத் தேர்வு - 2024 | |
|---|---|---|
| நேரம்: 3:00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 90 |

## பகுதி - I பலவுள் தெரிக

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 14 x 1 = 14

1. உலகப் புவி நாள் யாது?
   அ) மார்ச் 22 ஆ) ஏப்ரல் 22 இ) சூன் 18 ஈ) ஆகஸ்ட் 23
2. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணநூல்
   அ) தண்டியலங்காரம் ஆ) நன்னூல் இ) தொல்காப்பியம் ஈ) யாப்பெருங்கலக்காரிகை
3. கணல்பூக்கள் என்ற புதினத்தை எழுதியவர் யார்?
   அ) சுந்தர சோழன் ஆ) பூமணி இ) கோணங்கி ஈ) உத்தம சோழன்
4. சிலம்பு கழி நோன்பு செய்தவள் யார்?
   அ) நற்றாய் ஆ) செவிலித்தாய் இ) கனவனின்தாய் ஈ) கனவனின் தங்கை
5. தாழ்கடல் இலக்கணக் குறிப்பு தருக.
   அ) பண்புத்தொகை ஆ) மரூஉ இ) வினைத்தொகை ஈ) அன்மொழித்தொகை
6. கவிதைக்காக முழுக்கமுழுக்க கவிதைகளை கொண்ட சுரதா நடத்திய இதழ்
   அ) துறைமுகம் ஆ) காவியம் இ) தென்றல் ஈ) ஊர்வலம்
7. செங்கோட்டி யாழ் எத்தனை நரம்புகளைக் கொண்டது : அ) 21 ஆ) 16 இ) 7 ஈ) 17
8. ஐம்பெரும் காப்பியம் எண்ணும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர் யார்?
   அ) சிவஞான முனிவர் ஆ) மயிலை நாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்
9. நடிப்புலகின் சக்ரவர்த்தி எனப் புகழப்பட்டவர்?
   அ) எம்.ஜி.ஆர் ஆ) கமலஹாசன் இ) சிவாஜி கனேசன் ஈ) ஜெமினி கனேசன்
10. பகைவராலும் அழிக்க முடியாத அரண்
    அ) நட்பு ஆ) அறிவு இ) பணம் ஈ) செல்வம்
11. "கோ அதன் செல்லிரும் பொறை மகன்" என் கல்வெட்டு உள்ள இடம்
    அ) புகளூர் ஆ) போகலூர் இ) மதுரை ஈ) மாங்குளம்
12. சாபவிமோசனம் அகலிகை கதைகளில் தொண்மங்களைப் பயண்படுத்தியவர்
    அ) கு. அழகிரிசாமி ஆ) ஜெயமோகன் இ) புதுமைப்பித்தன் ஈ) சுந்தர ராமசாமி
13. கொல்லி மலையையும் அதைச் சூழ்ந்த பகுதிகளையும் ஆண்ட வள்ளல்
    அ) பேகன் ஆ) வல்வில் ஓரி இ) திருமுடிக்காரி ஈ) ஆய்வுண்டிரன்
14. விளியறி ஞமனி இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
    அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

## பகுதி II பிரிவு - 1

எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளி. 3 x 2 = 6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. எதிர்பாராத விருந்தினராக ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாரை?
17. நிலையாமை குறித்து உரைக்கும் கருத்து யாது?
18. அறிவுடை வேந்தனின் நெறிகுறித்து பிசிராந்தையன் கூறுவன யாவை?

### பிரிவு - 2

எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2 x 2 = 4

19. பசுமைக் குடில் வாயுக்கள் யாவை?
20. ஓலையில் ஏழுதுவதற்குரிய எழுத்தாணிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
21. மயிலை சீனி வேங்கடசாமி எழுதிய நூல்களைக் கூறுக?

### பிரிவு - 3

எவையேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளி. 7 x 2 = 14

22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?
23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம்,
    உண்மையானவற்றை தெரிந்துகொண்டு
    அறியாமையினைந் அகற்றி பல
    நல்லனவற்றை கற்றுகொடுக்கும்.
24. பொருள் வேறுபாடு அறிந்து தொடரமைக்க : கான் - காண்
25. பொருத்தமான வேற்றுமை உறுபுகளைச் சேர்த்து முறையான தொடராக்குக.
    (ஐ, ஆல், கு, இன், 23, காண்)
    அ) மாறன் பேச்சுதிறன் (பார் வெல்ல முடியும்)
    ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க : அ) பலகை ஆ) தலைமை
27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அருங்கானம், ஒருமையுடன்
28. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக. :
இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்
29. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக. : தொழதனர் - பகைத்த
30. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்

## பகுதி III பிரிவு - 1

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 4 = 8**

31. சடாயுவைத் தந்தயாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத்தேடினர்?
33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
34. ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின் - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

## பிரிவு - 2

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 4 = 8**

35. "பாடவும் ஈத்த கெடர்வு நல்லிசை" என்ற சங்கப்பாடலின் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க பண்பாகும் விளக்குக.
36. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
37. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
38. பயிர்தொழில் பழகுதலை மேலாண்மையோடு விளக்குக.

## பிரிவு - 3

**எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **3 x 4 = 12**

39. அ) உவமையணியைச் சான்றுடன் விளக்குக **(அல்லது)**
ஆ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும் - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக.
மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணையிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக்குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட ட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது - வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா - பாரதியார்

41. அ) பாடாண் திணையைச் சான்று தந்து விளக்குக **(அல்லது)**
ஆ) கூதிர்ப் பாசறையைச் சான்றுடன் விளக்குக.
42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) அறிமடமும் சான்றோர்க்கு அணி **(அல்லது)** ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்
43. தமிழாக்கம் தருக.
**1. The limits of my longuage are the limit of my world** **2. Green beld movement**
**3. Tamilnadu is extremely well known for its marvellous temples and other architectural gems**
**4. Passport - Visa**

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3 x 6 = 18**

44. அ) பணப் பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பின் உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. **(அல்லது)**
ஆ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.
45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்து மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. எவ்வாறு? விளக்குக. **(அல்லது)**
ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக.
46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. **(அல்லது)**
ஆ) "சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு" இக் கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

## பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக** **2 + 4 = 6**

அ) "விண் வேறு" எனத் தொடங்கும் இதில் வெற்றி பெற மனப் பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. ஆ) "புகின்" என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com